

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான, வசந்தம் க.கார்த்திகேயன் அவர்களின் மைத்துனரும், அவரது தங்கையின் கணவருமான, சி.அருண்குமார் அவர்களின் மறைவையொட்டி, அவரது புகழ் உடலுக்கு, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுதுறை அமைச்சர் சி.வெ. கணேசன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி ஆகியோர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி அன்னாரை பிரிந்து வாடும் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.



விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம், குலதீபமங்கலம் ஊராட்சி ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர் சேர்க்கை பணிகள் குறித்து மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதம சிகாமணி ஆய்வு மேற்கொண்டார் . உடன் மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு.தங்கம், பேரூராட்சி தலைவர் ராயல் அன்பு, நகர மன்ற துணை தலைவர் குணா, ஒன்றிய நிர்வாகிகள் ஆனந்தன், முருகன், சுகவனராஜன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பாலமுருகன், தகவல் தொழில்நுட்ப அணி கிருஷ்ணராஜ், நாராயணன், குமரவேல், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## உடன்பிறப்புகளின் முகவரியாய் இணையத்தில் பதிவாகி

# எத்தனையோ பேருக்கு உதவி, பயனுள்ள நிறைவாழ்வு வாழ்ந்தவர்!

### திருவைகுண்டம் கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளர் ஆ.சக்திவேல் மறைவுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஆக.14-**

**திருவைகுண்டம் கிழக்கு ஒன்றியக் கழக துணைச் செயலாளர் ஆ.சக்திவேல் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வலைதளத்தில் பதிவிட்டுள்ள கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "உடன்பிறப்புகளின் முகவரியாய் இணையத்தில் பதிவாகி, எத்தனையோ பேருக்கு உதவி, பயனுள்ள நிறைவாழ்வு வாழ்ந்தவர்!" என்று புகழாரம் சூட்டியுள்ளார்.**

முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-



தன்னலங்கருதா உழைப்பால் தமது இறுதி மூச்சு வரையிலும், கழக உணர்வூட்டிய பெருந்தகையாளர் சக்திவேல் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைகிறேன்.

தி.மு.க.காரர் என்கிற சொல்லுக்கு பொருள்கூற வேண்டுமென்றால், சக்திவேல் அவர்களைக் காட்டினால் போதும் எனுமளவுக்கு, உடன்பிறப்புகளின் முகவரியாய் இணையத்தில் பதிவாகி, எத்தனையோ பேருக்கு உதவி, பயனுள்ள நிறைவாழ்வை வாழ்ந்து மறைந்துள்ளார் சக்திவேல் அவர்கள்.

அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர், கழக உடன்பிறப்புகள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலும் ஆறுதலும்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# முசிறி விவசாயிகளுக்கான வாழைப்பழ குளிர் சேமிப்பகம் அவசியம்!

## மக்களவையில் அருண் நேரு எம்.பி. வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக.14-

பெரம்பலூர் மக்களவை தொகுதி எம்.பி. என். அருண் நேரு, தமிழ்நாட்டின் முசிறி பகுதியில் வாழும் வாழைப்பழ விவசாயிகளின் பிரச்சினையை இன்று மக்களவையில் விதி 377ன் கீழ் முன்வைத்து, மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

காவிரி நதிக்கரையில் வளமாக விளையும் முசிறி, தொட்டியம், குளித்தலை பகுதிகள் மாநிலத்தின் முக்கிய வாழைப்பழ உற்பத்தி மையங்களாகும். புவன், ரச்தாளி, நெந்திரன் போன்ற பல்வேறு இனங்கள் இங்கு விளைவிக்கப்பட்டு நாடு முழுவதும் விநியோகிக்கப் படுகின்றன.

ஆனால், இப்பகுதியில் நவீன குளிர் சேமிப்பு வளாகங்கள் இல்லாத காரணத்தால், விவசாயிகள் அறுவடை காலங்களில் தங்களின் பயிர்களை மிகக் குறைந்த விலையில் விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்



தார். இதனால், அவர்களுக்கு பெரும் நிதி இழப்புகள் ஏற்படுகின்றன என்றும், ஆண்டு முழுவதும் செய்த உழைப்பும் வீணாகின்றது என்றும் கவலை வெளியிட்டார்.

திருச்சிராப்பள்ளியில் தேசிய வாழைப்பழ ஆராய்ச்சி மையம் (ICAR NRCB) இருப்பது இப்பகுதியின் மூலதன முக்கியத்துவத்தை காட்டுகிறது.

எனவே, முசிறியில் பெரிய அளவிலான நவீன குளிர் சேமிப்பு வளாகம் அமைப்பதற்கு மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

## திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி

# திருப்பத்தூர் நகராட்சியில் புதிய குடிநீர் விநியோக திட்டப்பணி!

## அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திருப்பத்தூர் ஆக.14-

திருப்பத்தூர் சட்டமன்றத்தொகுதி திருப்பத்தூர் நகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட 5 வார்டுகளுக்கு கூட்டுக்குடிநீர் திட்டத்தின் வாயிலாக குடிநீர் வினியோகம் செய்திட அப்பகுதி மக்கள் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி அவர்களிடம் தொடர்ந்து கோரிக்கை வைத்து வந்தனர். கடந்த ஆட்சிகாலத்தில் சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்தும், கோரிக்கை கடிதம் வழங்கியும் கடந்த ஆட்சியாளர்கள் செவிசாய்க்கவில்லை தொடர்ந்து எல்லோர்க்கும் எல்லாம் வழங்கும் கழக ஆட்சியில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பொதுப்பணி நெடுஞ்சாலைத்துறை அமைச்சர், நகர் புறவளர்ச்சித்துறை அமைச்சர் ஆகியோரை சந்தித்து இப்பணிக்கு ஆவண செய்ய கோரிக்கை வைத்தார்கள் அதன் பலனாக,

காந்திநகர் பகுதியில் 3லிட்டர் இலட்சம் கொள்ளளவு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பகுதி1ல் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு, மருத்துவர்நகரில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு, வள்ளுவர்நகரில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு, திருமால் நகர் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு, வெங்கடேஷ்வரா நகர் பகுதியில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 6 புதிய மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் குடிநீர் விநியோக பைப்லைன்கள் 10.46 கோடி மதிப்பீட்டில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் அமைத்திட நிதி ஒதுக்கீடு செய்து பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி வார்டுகள் 29,33,31,15,36 ஆகிய ஐந்து வார்டுகளில் உள்ள 20,000த்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெறும் இதை மேம்பாட்டு பணிகளை அ.நல்ல தம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் நகர செயலாளர் சு.ராசேந்திரன், சேர்மென் சங்கீதாவெங்கடேசன், துணைசேர்மென். சபியுல்லா, முன்னாள் நகர மன்ற தலைவர் சு.அரசு, டி.ரகுநாதன், கே.பி.ஆர். ஜோதி ராஜன், டி.கே. மோகன், பி.வி. பிரேம் குமார், வார்டு கவுன்சிலர்கள் சத்யாராஜசேகர், எஸ். கோபிநாத், ச.மனோகரன், ஜீ வி தா பா ர் த் தீ ப ன் , மு.வெற்றிக்கொண்டான், உள்ளிட்ட கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நீண்ட நெடுநாள் கோரிக்கையை நிறைவேற்றிய கழக அரசிற்கும் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு அந்தந்த பகுதி மக்கள் மகிழ்வோடு நன்றி பாராட்டினார்கள்.




# தி.மு.க. இளைஞர் அணி

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 2–இல் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 16.08.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | திருக்கோவிலூர் | தேவிமுருகன் திருமண மண்டபம், திருக்கோவிலூர், விழுப்புரம். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 12-08-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


# தி.மு.க. வர்த்தகர் அணி

## மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

### தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. அணியின் **விழுப்புரம் மத்திய** மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**விழுப்புரம் மத்திய மாவட்டம்**

தலைவர் – எம்.எல்.டி. சங்கர் 12ஈ, நடுத் தெரு, நரசிங்கபுரம், வி.மருதூர், விழுப்புரம்.

துணைத் தலைவர் – க. அரிராமன் அத்தியூர் திருவாதி, கோலியனூர் ஒன்றியம், விழுப்புரம் வட்டம், விழுப்புரம்.

அமைப்பாளர் – எஸ். வெங்கடேசன் 171, காமராஜர் வீதி, விழுப்புரம்.

துணை அமைப்பாளர்கள் - 1) நட. ஆனந்த் 70/43, கே.கே. ரோடு, விழுப்புரம்.

2) ஜெ. ராமதாஸ் பாண்டி - திண்டிவனம் கூட்ரோடு, திருச்சிற்றம்பலம், வானூர் வட்டம், விழுப்புரம். 3) ஜி.ஆர். மோகன் கங்கையம்மன் கோயில் தெரு, கோலியனூர் மற்றும் அஞ்சல், விழுப்புரம் வட்டம், விழுப்புரம். 4) என். சூரியமூர்த்தி 62, அண்ணா தெரு, எருமணந்தாங்கல், 5வது வார்டு, விழுப்புரம். 5) கே. வெங்கடேசன் தாயுமானவர் தெரு, விழுப்புரம். 6) அ. அன்ஷர்பாட்சா கன்னியம்மன் கோயில் தெரு, சின்னகோட்டக்குப்பம், வானூர், விழுப்புரம். 7) கே. சீனுவாசன் வாணியம்பாளையம், வி. அகரம் அஞ்சல், விழுப்புரம் மாவட்டம். 8) கே. ராஜகுரு 1/34, பெருமாள் கோயில் தெரு, வி. புதூர், கண்டமங்கலம் மேற்கு ஒன்றியம், விழுப்புரம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 12-08-2025.

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்,
**தி.மு.க. வர்த்தகர் அணி**



சிவகங்கை மாவட்டம் கல்லல் கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் தலைவர் கலைஞர் அவர்களின் 7வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு கல்லல் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் நா.நெடுஞ்செழியன் தலைமையில் நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

# தி.மு.க. இலக்கிய அணி

## மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

### தி.மு.க.இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் / பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. இலக்கிய அணியின் **விழுப்புரம் மத்திய** மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**விழுப்புரம் மத்திய மாவட்டம்**

தலைவர் – ஏ. சச்சிதானந்தம் மேற்கு தெரு, சாலையாம்பாளையம் அஞ்சல், விழுப்புரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணைத் தலைவர் - பி. முத்துராமலிங்கம் 4/3, முத்தியால் தெரு, வி. மருதூர், விழுப்புரம்.

அமைப்பாளர் – துரை. மணிவேலன் 51-ஏ, முத்துமாரியம்மன் கோயில் தெரு, கிழக்கு பாண்டி ரோடு, வி. மருதூர் தெரு, விழுப்புரம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர். பிரவீன்ராஜ் 3/166, மாரியம்மன் கோயில் தெரு, சின்னக்கொங்கம்பட்டு, ராம்பாக்கம் அஞ்சல், விழுப்புரம். 2) ஆர். கிருஷ்ணமூர்த்தி அண்ணா வீதி, இராகவன்பேட்டை, விழுப்புரம். 3) வீரா. ஏழுமலை அண்ணல் அம்பேத்கர் தெரு, கண்டமானடி, விழுப்புரம் வட்டம், விழுப்புரம். 4) வே. வல்லபராசு பொம்பூர் மற்றும் அஞ்சல், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 5) எஸ். ஆறுமுகம் 22/2, மாரியம்மன் கோயில் தெரு, புளிச்சப்பள்ளம் அஞ்சல், வானூர் வட்டம், விழுப்புரம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 12-08-2025.

**வி.பி.கலைராஜன்**
செயலாளர்,
**தி.மு.க. இலக்கிய அணி**




திருப்பத்தூர் தொகுதி திருப்பத்தூர் நகராட்சியில் 15000 மக்கள் பயன்பெறும் குடிநீர் விநியோகப் பணிகளுக்கு அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஏ.கே.ஜெகதீசன்

### ஆகஸ்ட் 14 (2020)



**கழகம் தொடங்கப்பட்ட முதலே உறுப்பினராகிய மூத்த கழக முன்னோடியான இவர், வகுப்புவாரி உரிமை ரத்து செய்யப்பட்டபோது, சமூக நீதியின் போர்க்குரலாக சக மாணவர்களைத் திரட்டிப் போராடியவர்.**

**சேப்பாக்கம் பகுதிச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்பு வகித்தவர்.**

**பேரறிஞர் அண்ணா தலைமையில், தலைவர் கலைஞர் முன்னிலையில் கலைஞரின் "நச்சுக்கோப்பை" நாடகத்தை நடத்தி அதில் நடித்தவர். மிசா காலத்தில் கலைஞர் அவர்களுக்கு அவருக்கு உறுதுணையாக இருந்தார் என்பதற்காகவே போலீசாரால் கடுமையாகத் தாக்கப்பட்டதோடு, பொய் வழக்கில் கலைஞர் அவர்களுடன் கைது செய்யப்பட்டவர்.**

**1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் – 2001ல் மாநகராட்சியின் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக செயல்பட்டவர்.**

**2019ல் கழக முப்பெரும் விழாவில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால், முத்தமிழறிஞர் கலைஞரின் "நெஞ்சுக்கு நீதி"யில் பாராட்டப்பட்டுள்ள இவருக்கு "கலைஞர் விருது" வழங்கி சிறப்பித்தார்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.